1856இல் கால்டுவெல் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணத்தை எழுதி வெளியிடுவதற்கு நாற்பதாண்டுகளுக்கும் முன்பே ‘திராவிட மொழிக் குடும்பம்’ என்ற கருத்தாக்கத்தை முன்மொழிந்தவர் எல்லிஸ் என்பதை விரிவாக எடுத்துரைக்கும் நூல் இது. திருக்குறளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த முன்னோடி, திருவள்ளுவர் படம் பொறித்த தங்க நாணயங்களை வெளியிட்ட அரசு அதிகாரி என்ற அளவிலேயே பரவலாக அறியப்படும் எல்லிஸின் பரந்த மொழியியல் ஆய்வுச் சாதனைகளை இந்நூல் ஆழமாக ஆராய்கிறது. பிரிட்டிஷ் காலனிய ஆவணங்களில் புதைந்து கிடக்கும் செய்திகளைத் திரட்டியுள்ளதோடு, ஏறத்தாழ இரு நூறாண்டுகளாக எவருமே பார்த்திராத எல்லிஸின் கையெழுத்துப் படிகளையும் கண்டெடுத்து இந்நூலை எழுதியிருக்கிறார் பேராசிரியர் தாமஸ் டிரவுட்மன். கலிபோர்னியா பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள நூலின் தமிழ் வடிவம் இது.

‘திராவிட உறவுமுறை’ என்ற புகழ்பெற்ற நூலை எழுதிய தாமஸ் டிரவுட்மன் இலண்டன் பல்கலைக்கழகத்தில் ஏ.எல். பாஷம் மேற்பார்வையில் முனைவர் பட்டம் பெற்றவர். அமெரிக்காவிலுள்ள மிஷிகன் பல்கலைக்கழகத்தில் 1968 முதல் பணியாற்றிவரும் டிரவுட்மன், அங்கு மானிடவியல் மற்றும் வரலாற்றுப் பேராசிரியராக விளங்குகிறார். இவருடைய முக்கிய நூல்கள்: *Dravidian Kinship (1981); Lewis Henry Morgan and the Invention of Kinship (1987); Aryans and British India (1997); ed., The Aryan Debate (2005).*

இந்நூலை மொழிபெயர்த்துள்ள இராம. சுந்தரம் மொழியியலில் முனைவர் பட்டம் பெற்றவர். அண்ணாமலைப் பல்கலைக்கழகம், தமிழ்ப் பல்கலைக்கழகம், போலந்து வார்சா பல்கலைக்கழகம் ஆகியவற்றில் பேராசிரியராகப் பணியாற்றியிருப்பவர்.

எம்.ஐ.டி.எஸ். நிறுவனத்தோடு இந்நூலை இணைந்து வெளியிட்டுள்ளவர்கள் காலச்சுவடு பதிப்பகம்.

அளவு: டெமி 1 × 8; பக்கம்: 340; விலை: ரூ. 150
தொடர்புகளுக்கு: pub@mids.ac.in மற்றும்
**காலச்சுவடு பதிப்பகம்**
669, கே.பி. சாலை, நாகர்கோயில் 629 001
தொலை: 04652-278525 • kalachuvadu@sancharnet.in

# திராவிடச் சான்று

## எல்லிஸும் திராவிட மொழிகளும்

நூல் அறிமுக விழா
31 ஜூலை 2007



தாமஸ் டிரவுட்மன்